

புதுக்கோட்டை தெற்கு மாவட்ட தி.மு.க. இளைஞர் அணி திருமயம் சட்டமன்றத் தொகுதி சார்பில் ஒன்றிய அரசைக் கண்டித்து சீரணி கலையரங்கம் திருமயத்தில் நடைபெற்ற மாபெரும் கண்டன பொதுக்கூட்டத்தில் தமிழ்நாடு சட்டத்துறை அமைச்சர், புதுக்கோட்டை தெற்கு மாவட்டச் செயலாளர் எஸ்.ரகுபதி கண்டன உரையாற்றினார். நிகழ்வில் தலைமைக் கழக பேச்சாளர்கள் ராச கம்பீரன் அப்பாஸ், இரா. பிரீத்தி, மாவட்ட இளைஞரணி அமைப்பாளர் த.மணிராஜன், பி.இளையராஜா, இரா.தமிழ்ராசு, அருண்குமார், ஏ.முகமது ரபீக், நா.நசுருதீன், டாக்டர் ரகு அண்ணாமலை, அ. சுப்பிரமணியன், எஸ்.ஜெயராமன், ஆறு.அழகு சிதம்பரம். பொன்.ராமலிங்கம், வி.ஆர்.இளையராஜா அ.அடைக்கலமணி, அ.முத்து மற்றும் கழக உடன்பிறப்புகள் கலந்து கொண்டனர்.

# வீரபாண்டியாருக்கு சிலை; நானே வந்து திறக்கிறேன்!

## பேரவையில் பா.ம.க. உறுப்பினருக்கு அமைச்சர் துரைமுருகன் பதில்!



சென்னை, மார்ச் . 27-

சட்டப் பேரவையில் நகராட்சி நிருவாகம் துறை மானியக் கோரிக்கையில் பா.ம.க. உறுப்பினர் இரா. அருள் பேசியதும், அதற்கு நீர்வளத்துறை அமைச்சர் துரைமுருகன் அவர்கள் அளித்த பதிலும் வருமாறு:-

**இரா. அருள்** : சேலத்தை தன்னுடைய வீடு போன்று சிற்பமாக செதுக்கிய ஒரு திராவிடத் தலைவன் அண்ணன் வீரபாண்டியார் அவர்கள். வீரபாண்டியார் அவர்கள் வாழ்ந்த கொண்டலாம்பட்டி, பூலாவரிக்குச் செல்கிற வழியில் இருக்கிறது. அந்தக் கொண்ட லாம்பட்டி ரவுண்டானாவிலே அவருக்கு ஒரு சிலை வைக்க வேண்டும். அந்தக் கொண்டலாம்பட்டி ரவுண்டானாவிற்கு வீரபாண்டியார் சதுக்கம் என்று பெயர் சூட்ட வேண்டும்.

**நீர்வளத்துறை அமைச்சர் துரைமுருகன்:** வீரபாண்டியாருக்குச் சிலை வைப்பதில் யாருக்கும் மாறுபட்ட கருத்து இல்லை. கொண்டலாம்பட்டி சாலையில் வைக்க வேண்டுமென்று சொன்னால், இப்போது எந்தச் சாலையிலும், எந்தச் சிலையும் வைக்க முடியாது. அதாவது, private ஆக land வாங்கித்தான் அது போல் வைக்கலாமே தவிர, சர்க்காருடைய எந்த இடத்திலும் வைக்க முடியாது. ஆகையினால், உறுப்பினர் இரா. அருள் அவர்கள், வீரபாண்டியார்மீது இருக்கிற அக்கறைக்கு, பாசத்திற்கு, அந்தப் பகுதியிலேயே கொஞ்சம் இடத்தை வாங்கி அந்த இடத்தில் சிலை வையுங்கள். நானே வந்து திறக்கிறேன்.

இவ்வாறு விவாதம் நடைபெற்றது.

### சட்டமன்றத்தில் அறிவிப்பு!

# பெரம்பலூர் மாநகராட்சியாக உயர்த்த நடவடிக்கை எடுக்கப்படும்!

## மாவட்ட மக்களின் சார்பில் மாவட்டக் கழகப் பொறுப்பாளர் வீ.ஜெகதீசன் நன்றி!

பெரம்பலூர், மார்ச்,27-

பெரம்பலூர் மாநகராட்சியாக உயர்த்த நடவடிக்கை எடுக்கப்படும் என்று சட்டமன்றத்தில் அறிவிக்கப்பட்டதற்கு பெரம்பலூர் மாவட்ட கழக பொறுப்பாளர் வீ. ஜெகதீசன் நன்றி தெரிவித்து அறிக்கை வெளியிட்டுள்ளார்.

அந்த அறிக்கை வருமாறு:-

நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறையின் சார்பில் 25.03.2025, செவ்வாய்க்கிழமை அன்று நடைபெற்ற மானியக் கோரிக்கை அறிவிப்புகளில், பெரம்பலூர் மாவட்டம், குரும்பலூர் பேரூராட்சிக்கு புதிய குடிநீர் அபிவிருத்தி பணிகள், பூலாம்பாடி பேரூராட்சிக்கு புதிய அலுவலகக் கட்டிடம், பெரம்பலூர் நகராட்சிக்கு நவீன எரிவாயு தகன மேடை, பெரம்பலூரை மாநகராட்சியாக்க உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை அமைச்சர் கே.என்.நேரு அவர்கள் சட்டப்பேரவையில் அறிவித்துள்ளார்.

தி.மு.க. ஆட்சியில் எப்போதும் பெரம்பலூர்க்கு பல்வேறு வளர்ச்சி திட்டங்கள் அறிவித்து செயல்படுத்தப்பட்டுள்ளது. பெரம்பலூர் மாவட்டத்தில் வளர்ச்சி பணிகள் என்பது மாண்புமிகு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தலைமையிலான ஆட்சியில் எண்ணற்ற திட்டங்கள் அறிவித்து மாவட்டம் வளர்ச்சி பாதையில் சென்று கொண்டுள்ளது.

பெரம்பலூர் மாவட்ட பொதுமக்கள், வணிகர்கள் உள்ளிட்டோர் மகிழ்ச்சியடையும் வகையில் மாநகராட்சியாக உயர்த்த நடவடிக்கை எடுக்கப்படும் என்று அறிவித்த மாண்புமிகு முதலமைச்சர் மு.க. ஸ்டாலின், மாண்புமிகு துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின், நகர்ப்புற வளர்ச்சித் துறை அமைச்சர் கே.என்.நேரு, கழக துணைப் பொதுச்செயலாளர் ஆ.இராசா.எம்.பி., போக்குவரத்துத்துறை அமைச்சர் சா.சி.சிவசங்கர், பாராளுமன்ற உறுப்பினர் கே.என்.அருண்நேரு, சட்டமன்ற உறுப்பினர் எம். பிரபாகரன் மற்றும் உறுதுணையாக இருந்த அதிகாரிகள் உள்ளிட்ட அனைவருக்கும் பெரம்பலூர் மாவட்ட மக்களின் சார்பில் நன்றியை தெரிவித்துக்கொள்கிறோம்.

பெரம்பலூர் மாவட்ட கழக பொறுப்பாளர் வீ. ஜெகதீசன் இவ்வாறு தனது அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

### நிவேதா எம்.முருகன் எம்.எல்.ஏ., தலைமை! ஏ.ஜி.ஜெ.பிரபாகரன் வரவேற்புரை!

# சீர்காழி மேற்கு ஒன்றியம் எடக்குடிவடபாதியில் முதல்வர் மு.க.ஸ்டாலின் பிறந்த நாள் விழா பொதுக் கூட்டம்!

## கரூர் முரளி சிறப்புரை! குத்தாலம் பி.கல்யாணம், எம்.பன்னீர்செல்வம் எம்.எல்.ஏ. பங்கேற்பு!

மயிலாடுதுறை. மார்ச். 27–

மயிலாடுதுறை மாவட்டம் சீர்காழி மேற்கு ஒன்றிய தி.மு.க. சார்பில் கழகத்தலைவர், தமிழ்நாடு முதலமைச்சர் தளபதி மு.க.ஸ்டாலின் பிறந்த நாள் விழா பொதுக் கூட்டம் எடக்குடிவடபாதியில் நடைபெற்றது. பொதுக்கூட்டத்திற்கு மயிலாடுதுறை மாவட்டக் கழகச் செயலாளரும், பூம்புகார் சட்ட மனற் உறுப்பினர் நிவேதா எம்.முருகன் தலைமை தாங்கினார். சீர்காழி மேற்கு ஒன்றியக் கழகச் செயலாளர் ஏ.ஜி.ஜெ.பிரபாகரன் வரவேற்றார். சீர்காழி மேற்கு ஒன்றிய

நிர்வாகிகள் ஜி.வீரமணி, இரா. முருகன், கே.சசிக்குமார், கலைச்செல்வி தியாகராஜன், எச். முகமதுஇத்ரீஸ், பி.அன்பழகன், சி.விஜயகுமார், பூ.மகேந்திரன், ஒன்றிய மாணவர் அணி அமைப்பாளர் ஆர்.கே.பிரபாகரன், ஒன்றிய மகளிர் அணி அமைப்பாளர் வி.விஜயராணி, கிளை கழக நிர்வாகிகள் கே.இரவிச்சந்திரன், ஆர்.எழிலரசன், சி.ஜெயபால், கே.திருமன்னன், ஈ.இராஜேஷ், எஸ்.முரளிதரன், கே.காந்தி, வி.எழிலரசி, ஜெ.நீலவாதி, ஆர்.பிரசாத், ஏ.சிற்றரசன், .கோர்த்தி, பி.சந்திரசேகரன், கே.மோகன், டி.சத்தியராஜ், ஆர்.சுபாஷ், ஆர்.முரளிதரன் ஆகியோர் முன்னிலை வகித்தனர். கூட்டத்தில் மாநில கொள்கை பரப்பு செயலாளர் கரூர்.முரளி சிறப்புரையாற்றினார்.

கூட்டத்தில் கழக உயர்நிலை செயல்திட்ட குழு உறுப்பினர் குத்தாயம் பி.கல்யாணம், சீர்காழி சட்டமன்ற உறுப்பினர் எம்.பன்னீர்செல்வம், சுழசு கொள்கை பரப்பு துாணச் செயலாளர் குத்தாலம் க.அன்பழகன், மாவட்டக் கழக அவைத்தலைவர் கே.ஜி.சீனிவாசன், துணைச் செயலாளர் எஸ்.செல்வமணி, பொருளாளர் மகாஅலெக்சாண்டர், நகரக் கழகச் செயலாளர்கள் ம.சுப்பராயன், குண்டாமணி (எ) என்.செல்வராஜ், ஒன்றியக் கழகச் செயலளார்கள் பஞ்சுகுமார், செல்லசேதுரவிக்குமார். மலர்விழிதிருமாவளவன், கு.வைத்தியநாதன், வைத்தீஸ்வரன்கோயில் பேரூர் செயலாளர் எம்.அன்புச்செழியன், பொதுக்குழு உறுப்பினர்கள் வைத்தீஸ்வரன்கோயில் எஸ்.சுவாமிநாதன், சுபா நெடுஞ்செழியன், எம். பி.கென்னடி, நந்தம் ஏ.வின்சென்ட், பி.சிவதாஸ், சார்பு அணி அமைப்பாளர்கள் காளி,தேசப்பன், இரா.முருகன், முன்னாள் ஒன்றியக் குழு தலைவர் தியாக.விஜயேஸ்வரன், மாவட்ட இளைஞர் அணி துணை அமைப்பாளர் ஜெ.ஜுபையர்அகமது, மாவட்ட சார்பு அணி துணை அமைப்பாளர்கள் பாலகிருஷ்ணன், சங்கரபாண்டியன், குலோத்துங்கள், செய்லமுத்து, பெரியசாமி, முத்துகுமார், திருச்செல்வன் மற்றும் மாவட்ட சார்பு அணி நிர்வாகிகள், உள்ளாட்சி அமைப்பு முன்னாள் பிரதிநிதிகள், கிளைக் கழக நிர்வாகிகள், வைத்தீஸ்வரன்கோயில் பேரூர் நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.

முடிவில் ஒன்றிய இளைஞர் அணி அமைப்பாளர் குண.தென்னரசன் நன்றி கூறினார்.



கழகத் தலைவர், தமிழக முதல்வர் மு க ஸ்டாலின் அவர்களின் 72 வது பிறந்தநாள் விழாவை முன்னிட்டு தெருமுனை பொதுக்கூட்டம். திருச்சி தெற்கு மாவட்ட கழகச் செயலாளர், அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி வழிகாட்டுதலின் பெயரில் கிழக்கு மாநகரம் பொன்மலை பகுதி கழகம் 45 மற்றும் 45(அ) வட்டக் கழகங்களின் சார்பில் பொன்மலை கல்கண்டார் கோட்டையில் நடைபெற்றது. மேலும் இந்த பொதுக்கூட்டத்திற்கு பகுதி கழகச் செயலாளர் இ.எம்.தர்மராஜ் அனைவரையும் வரவேற்றார். முருகானந்தம் மற்றும் தமிழ்மணி ஆகியோர் தலைமை வகித்தனர். மேலும் கூட்டத்திற்கு சிறப்பு அழைப்பாளர்களாக தலைமைக் கழக பேச்சாளர் தூத்துக்குடி சரத்பாலா, கிழக்கு மாநகரக் கழக செயலாளர் மு.மதிவாணன், இளம் பேச்சாளர் குமரவேல் ஆகியோர் சிறப்புரை ஆற்றினர்.



ஈரோடு மாநகராட்சி பெரியவலசு மாநகராட்சி உயர்நிலைப் பள்ளியில் கூடுதல் வகுப்பறை கட்டிடங்களையும் மேலும் பெரிய வலசு பகுதியில் மோட்டாருடன் கூடிய சின்டெக்ஸ் தண்ணீர் தொட்டியினையும் வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித்துறை அமைச்சர் சு.முத்துசாமி திறந்து வைத்தார். நிகழ்வில் மாவட்ட ஆட்சித்தலைவர் ராஜகோபால் சுன்கரா, ஈரோடு கிழக்கு சட்டமன்ற உறுப்பினர் வி.சி.சந்திரகுமார், மேயர் நாகரத்தினம், துணை மேயர் வி.செல்வராஜ் உள்ளிட்ட பலர் பங்கேற்றனர்.

# நாமக்கல் மேற்கு மாவட்டக் கழக செயற்குழுக் கூட்டம்!

## மாவட்டக் கழகப் பொறுப்பாளர் கே.எஸ்.மூர்த்தி அறிவிப்பு!



நாமக்கல் மார்ச் 27-

நாமக்கல் மேற்கு மாவட்ட கழக செயற்குழுக் கூட்டம் நடத்துவது தொடர்பாக மாவட்ட கழகப் பொறுப்பாளரும், முன்னாள் சட்டமன்ற உறுப்பினருமான கே.எஸ். மூர்த்தி அறிக்கை ஒன்றை வெளியிட்டுள்ளார்.

அதில் நாமக்கல் மேற்கு மாவட்ட கழக செயற்குழு கூட்டம் நாளை (28 ந் தேதி வெள்ளிக்கிழமை) காலை 10 மணிக்கு திருச்செங்கோடு பழைய பேருந்து நிலையம் அருகே உள்ள கொங்கு சமுதாய கூடத்தில் மாவட்ட அவைத் தலைவர் இரா.நடன சபாபதி தலைமையில் நடைபெற உள்ளது.

இக்கூட்டத்திற்கு தலைமைக் கழக நிர்வாகிகள், மாவட்ட கழக நிர்வாகிகள், ஒன்றிய, நகர, பேரூர் கழக செயலாளர்கள், சிறப்பு அழைப்பாளர்கள், அனைத்து சார்பு அணி மாவட்ட அமைப்பாளர்கள் மற்றும் தலைவர்கள், உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள் என அனைவரும் தவறாமல் கலந்து கொள்ளுமாறு அன்புடன் கேட்டுக் கொள்கிறேன்.

பொருள் : 1.கழகத் தலைவரும், தமிழ்நாடு முதலமைச்சருமான மு.க.ஸ்டாலின் அவர்களின் பிறந்தநாள் விழா பொதுக்கூட்டம் நடத்துவது தொடர்பாக,

2. இந்தித் திணிப்பு, நிதி பகிர்வில் பாரபட்சம், தொகுதி சீரமைப்பில் அநீதி இழைக்கும் ஒன்றிய அரசை கண்டித்து பொதுக் கூட்டம் நடத்துவது குறித்து,

3. கழக ஆக்கப் பணிகள் குறித்து.

இவ்வாறு மாட்டக் கழகப் பொறுப்பாளர் கே. எஸ். மூர்த்தி அறிவித்துள்ளார்.

### புதுக்கோட்டை தொகுதி – வடவாளம் ஊராட்சி –

# சின்னையா சத்திரத்தில் துணை மின் நிலையம் விரைந்து நிறுவிடுவீர்!

## சட்டப் பேரவையில் – டாக்டர் வை.முத்துராஜா வலியுறுத்தல்!



சென்னை,மாச்.27-

சட்டப் பேரவையில் கேள்வி நேரத்தின் போது, புதுக்கோட்டை தொகுதி கழக உறுப்பினர் டாக்டர் வை.முத்து ராஜா, "புதுக்கோட்டை தொகுதி - வடவாளம் ஊராட்சி - சின்னையா சத்திரத்தில் துணை மின் நிலையம் அமைக்கும் பணியினை விரைந்து நிறைவேற்றிடுவீர்" என வேண்டுகோள் விடுத்தார்.

சட்டப் பேரவையில் கேள்வி நேரத்தின் போது நடைபெற்ற விவாதம் வருமாறு:

**டாக்டர் வை. முத்து ராஜா:** புதுக்கோட்டை சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட வடவாளம் ஊராட்சி, சின்னையா சத்திரத்தில் அண்மையில் அரசு அறிவித்த துணை மின்நிலையத்தை விரைந்து செயல்படுத்திக் கொடுத்தால், அருகிலுள்ள புதுக்கோட்டை அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனை, அரசு கால்நடைப் பண்ணை, புதிதாக அமையவுள்ள முள்ளூர் துணைக்கோள் நகரம், புதுக்கோட்டை SIDCO தொழிற்பேட்டை மற்றும் சுற்றுவட்டார விவசாயிகளுக்கு மும்முனை மின்சாரம் தங்குதடையின்றி கிடைக்கும் என்பதைத் தெரிவித்துக் கொண்டு, மேற்கண்ட பணிகளுக்கு நடப்பு நிதியாண்டில் நிதி ஒதுக்கீடு செய்து, பணிகளைத் தொடர அரசு முன்வருமா?

**அமைச்சர் வி.செந்தில் பாலாஜி:** உறுப்பினர் அவர்கள் சுட்டிக்காட்டிய அந்தத் துணை மின் நிலையத்திற்கு 2 ஏக்கர் நிலம் தேர்வு செய்யப்பட்டு மின் வாரியத்திற்கு வகைமாற்றம் செய்யப்பட்டிருக்கிறது. 250 துணை மின் நிலையங்களிலும் அதற்கான துணை மின் நிலையங்களும் இடம் பெற்றிருக்கிறது. எனவே, விரைவில் அதற்கான பணிகளைத் துறைரீதியாக தொடங்கப்படும்.

இவ்வாறு பேரவையில் விவாதம் நடைபெற்றது.



சேலம் கிழக்கு மாவட்டம் ஒருங்கிணைந்த தலைவாசல் ஒன்றிய தி.மு.க பாக நிலை முகவர்கள் மற்றும் பூத் கமிட்டி உறுப்பினர்கள் கலந்தாய்வுக் கூட்டம் ஒன்றிய செயலாளர்கள் மணி, அழகுவேல் ,பாலமுருகன், ஆகியோர் முன்னிலையில் நடைபெற்றது. கூட்டத்தில் சிறப்பு அழைப்பாளராக கிழக்கு மாவட்ட செயலாளர் எஸ் .ஆர்.சிவலிங்கம் கலந்து கொண்டு பல்வேறு ஆலோசனைகள் வழங்கி சிறப்புரையாற்றினார். கூட்டத்தில் மாவட்ட அவை தலைவர் முரா.கருணாநிதி, சுரேஷ்குமார், சின்னதுரை, மாவட்ட நெசவாளர் அணி அமைப்பாளர் ஏ.ஏ. ஆறுமுகம், சந்திரமோகன், குணசேகரன்,மற்றும் திமுக நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.



கழகத்தலைவர், முதலைமைச்சர் அவர்களின் பிறந்த நாளை முன்னிட்டு கோவை செல்வபுரம் பகுதியில் கோவை வடக்கு மாவட்ட வர்த்தக அணி சார்பில் நலத்திட்ட உதவிகள் வழங்கும் விழாவில் வடக்கு மாவட்ட செயலாளர் தொண்டாமுத்தூர் ரவி கலந்து கொண்டு பொதுமக்களுக்கு நலத்திட்ட உதவிகளை வழங்கினார். வர்த்தகர் அணி அமைப்பாளர் வேலுச்சாமி ஏற்பாட்டில் நடைபெற்ற இந்நிகழ்ச்சியில் பகுதி கழக செயலாளர்கள் கேபிள்மணி, கார்த்திக்செல்வராஜ் துணை மேயர் வெற்றிசெல்வன், மற்றும் ஜெயந்தி, அண்ணாதுரை, ராமச்சந்திரன், உசேன், தென்னை சிவா, சிவகுமார்,தியாகராஜன் செந்தில் மூர்த்தி, மல்லி, வட்டக் கழக செயலாளர்கள் ,அறிவழகன் இப்ராஹிம் உள்ளிட்ட கழக நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.